**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.61/2019**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 09 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சந்திரசேகர் | மதம் | : இந்து |
| த/பெ | : கண்ணய்யா | ஜாதி | : -- |
| வயது | : 47 | கிராமம் | : ராமாபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**09.01.2026**

**<u>பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

12. ஒப்படைப்பு ரசீதில் கையெழுத்து செய்துள்ள எங்கள் ஊரை சேர்ந்துள்ள ராமமூர்த்தி, பாபைய்யா ஆகியோருக்கும் எனக்கும் எந்த பிரச்சனை இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை வாதிக்கு நீதிமன்றம் மூலம் சுவாதீனம் ஒப்படைக்கும் போது நான் சிறிது தூரம்தள்ளி நின்று பார்த்ததாக நீதிமன்ற அமீனா தனது கட்டளையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் நான் அந்த இடத்திலேயே இல்லை. நான் இல்லாத போதுதான் அனைத்தும் செய்துள்ளார்கள். வாதிக்கு வழக்கு சொத்தை முறையாக சுவாதீனம் ஒப்படைத்துள்ளார்கள் என்றாலும் நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தை ஒப்படைக்கும்போது நீதிமன்ற அமீனா, கிராம நிர்வாக அதிகாரி, தலையாரி அனைவரும் வந்து முறையாக ஒப்படைத்துள்ளனர் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் இல்லை.

13. வழக்கு சொத்தை சுவாதீனம் ஒப்படைத்த தேதியில் இருந்து இன்றுவரை வாதிதான் அனுபவித்து வருகிறார் என்றாலும் நான் பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் சுவாதீனத்தில் இருப்பதை காட்ட எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். ஆவணங்கள் அனைத்தும் கிரி மாற்றி விட்டார். திருவள்ளூர் மாவட்ட நீதிமன்றத்தில் காலதாமத மனு IA No.3/2019 தாக்கல் செய்து தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் அதன் பேரில்

சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன். சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ததை காட்ட ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இனிமேல்தான் ஆவணங்கள் வாங்கிவந்து தாக்கல் செய்ய வேண்டும்.

14. IA No.3/2019 தள்ளுபடி ஆகி 3 வருடங்கள் மேல் ஆகிவிட்டது என்றாலும் நான் சீராய்வு மனு தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் மாமா எப்போது இறந்தார் என்றால் தெரியவில்லை. 2006ம் வருடம் இருக்கலாம். வழக்கு விவரம் என் மாமா பார்த்து வந்ததாக நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வாதியை கட்டுப்படுத்தாது என்றாலும் வாதி கோரியப்படி தீர்ப்பு செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)